C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 17 NOVEMBER 2025 ஆகாரம் : 11



தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக **அவருக்கு ஸ்தோத்திரம்.**

2கொரிந்தியர் 9:15

Thanks Be To God For His **Indescribable Gift!**

2 Corinthians 9:15

# UPCOMING EVENTS

**All Sun Nov '25** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Tue Nov '25** — Tuesday
7:30 pm
**COTTAGE PRAYER**
Church Members Home

**04 Nov '25** — Saturday
10.20 am
**MONTHLY FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Wed Nov '25** — Wednesday
7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**22 Nov '25** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**29 Nov '25** — Saturday
7:30pm - 09:30pm
**PRAISE & WORSHIP SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**29 Nov '25** — Saturday
9:30 pm
**BIBLE QUIZ-PSALMS**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**30 Nov '25** — Tuesday
11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Sat Nov '25** — Saturday
6:30 pm
**CHILDREN BIBLE SCHOOL**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Tue & Fri** — Tue & Fri
5pm (Tue) & 7:30pm (Fri)
**TAMIL CLASS**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

# From the Pastor's Desk



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.**

"இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவின் எதிர்காலம்"என்று கூறினவர் இந்தியாவின் முதல் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள்.அவர்களின் பிறந்த தினமான நவம்பர் 14ஆம் தேதியை இந்தியாவில் குழந்தைகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. "குழந்தைகளே எதிர்கால தொடக்கப் புள்ளிகள்"என்று அனைத்து உலக நாடுகள் இணைந்து நவம்பர் 20ஆம் தேதியை உலகளாவிய குழந்தைகள் தினமாக கடைபிடிக்கின்றது.

"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்;அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. மாற்கு 10:14 ல் ஆண்டவர் இயேசு கூறினார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த திரு.ராபர்ட் ரைக்ஸ் என்பவர் 1780 ஆம் ஆண்டில் சிறு பிள்ளைகளுக்கான ஓய்வு நாள் பள்ளியை தொடங்கினார். அதன் தொடர்ச்சியாக திரு.வில்லியம் ஃபாக்ஸ் என்பவர் 1785 ஆம் ஆண்டில் உலக ஞாயிறு பள்ளி என்று அதனை வலுப்பெறச் செய்தார். பிரியமானவர்களே, இந்த நவம்பர் மாதத்தில் சிறு பிள்ளைகளைப் போல நாம் நம்மை உள்ளத்தளவில் வாழ்வோம். அந்த உள்ளார்ந்த மனத்துடன் நமது அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகையைச் சிந்தித்துக் கொண்டாடுவோம்.

### உகந்ததைக் கொடுங்கள்:

உன் ஆண்டவராகிய கர்த்தர் உனக்கு கொடுக்கும் நாட்டில் உனக்கான பலன்கள் அனைத்திலும் உகந்ததைக்கொடுங்கள் என்று அன்று (உபாகமம் 26:2,3) இஸ்ரவேல் மக்களுக்கு மோசே வழியாக கர்த்தர் கட்டளையிட்டார், அது நமக்குமான கட்டளையாக இன்று இருக்கின்றது.

ஆண்டவராகிய கர்த்தர் நம் வாழ்விலே நமக்கு அளித்திருக்கிற நன்மையான கொடைகள் ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்து, இந்த அறுவடை பண்டிகையில் உகந்ததை கர்த்தருக்கு கொடுப்போம்.

### உற்சாகமாய் கொடுங்கள்:

எவரும் விசனமாய் அல்ல,கட்டாயமாய் அல்ல கர்த்தருக்கு என்று உற்சாகமாய் கொடுக்க வேண்டுகிறார் (2 பொருந்தியர் 9:7) தூய பவுல். பிரியமானவர்களே நமக்கான திறமைகளை **(TALENT)**,நமக்கான நேரத்தை **(TIME)**, நமக்கான பொருளாதாரத்தை **(TREASURE)** ஆண்டவராகிய இயேசுவின் திருப்பணிக்கென்று உற்சாகமாய் கொடுத்திட, தம்மையே சிலுவையில் ஈந்த ஆண்டவர் இயேசு நம்மை அழைக்கிறார்.

### உற்சாகமாய் கொடுங்கள்:

அன்று ஒரு நாள் ஆண்டவர் இயேசு எருசலேம் தேவாலயத்தில் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு ஏழை விதவை தன் வாழ்வாதாரமாய் இருந்த இரண்டு காசை போடுகிறதைக் கண்டு, அவரே எல்லாரிலும் அதிகமாய் காணிக்கையைப் போட்டவர் என்றார் இயேசு கிறிஸ்து (லூக்கா 21:2,4). பிரியமானவர்களே, நம் உள்ளத்தை பார்க்கிற ஆண்டவர் இயேசுவுக்கு முன்னர், நாம் நமக்கு உள்ளதை, உகந்ததை, உற்சாகமாய் கொடுப்போம், எல்லாவற்றிற்கும் மேலாக நம் உள்ளத்தையே ஆண்டவர் இயேசு வாழும் இல்லமாக படைப்போம்.ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.



Rev. S.Baktha Thiyagarajan

துணிச்சலானவர்

# மிரியாம்

(யாத் 2:4-8)



அன்பிற்கினியவர்களே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். திருமறையில் மிரியாமைக் குறித்து சிந்திக்கின்ற பொழுது உள்ளம் நெகிழ்ந்து போகின்றது. எகிப்தில் இஸ்ரவேலரின் வாழ்வு, அடக்கு முறையும் ஒடுக்குமுறையும் கசந்த வாழ்வு. அதன் உச்சமே எபிரேய பெண்களுக்கு பிறக்கும் ஆண் பிள்ளைகளைக் கொன்று (யாத் 1:15—22) போட வேண்டும் என்று பார்வோன் கட்டளை இட்டிருந்தான்.

இச்சூழலில் லேவியின் குடும்பத்தில் அம்ராம்—யோகெபேத் தம்பதியருக்கு (எண்27:59) பிறந்த அழகான ஒரு ஆண் குழந்தையை அதின் தாய் மூன்று மாதம் ஒளித்து வைத்து, அதன் பிறகு அக்குழந்தையை ஒரு நாணற் பெட்டியில் வைத்து அதின் தாயார் வேதனையோடு நதியில் விட்ட போது, அக்குழந்தையின் அக்கா மிரியாம் மனம் பதைத்தவராய் அதைத் தொடர்ந்து பின் செல்லுகிறார் (யாத் 2:3,4). அந்தப் பெட்டியை பார்வோனுடைய குமாரத்தி எடுத்தபோது, அக்குழந்தையின் அக்கா மிரியாம் பார்வோன் குமாரத்தியிடம் துணிச்சலுடன் சென்று, இந்தக் குழந்தைக்கு பால் கொடுத்து வளர்த்திட எபிரேய பெண்களில் ஒருவரை அழைத்து வரட்டுமா என்று கேட்டார் (யாத் 2:5—7).

இந்நிகழ்வில் மிரியாமுக்கு சிறுவயதிலேயே தைரியம், துணிவு,ஞானம்,சகோதர அன்பு இவற்றைக் காண முடிகிறது. குழந்தையின் தாயாகிய தன்னுடைய தாயையே மிரியாம் அழைத்து வந்து விடுகின்ற போது,அவருக்கு இருந்த விசுவாசம் சமயத்திற்கு தகுந்தபடி செயல்படக்கூடிய அறிவு (PRESENCE OF MIND) இவற்றால் நம் அகம் மகிழ்கிறது (யாத் 2:8,9). தன் சகோதரன் தன் சொந்த வீட்டிற்கு வருவதற்கு நல்ல செயலைச் செய்தார்.

பிள்ளை பெரிதானபோது அதின் தாயார் பார்வோன் குமாரத்தியிடம் கொண்டு போய் சேர்க்கிறாள். அவனை தண்ணீரில் இருந்து எடுத்தேன் என்று சொல்லி அவனுக்கு மோசே என்று போரிட்டாள் (யாத் 2:10). இஸ்ரவேலில் முதல் பெண் தீர்க்கதரிசி மிரியாம் ஆவார். இவர் இசைக் கருவிகளோடு கர்த்தரை போற்றி புகழ்ந்து துதித்து பாடினவர் (யாத் 15:20,21) மிரியாமும், ஆரோனும் பெருமையும் பொறாமையும் கொண்டவர்களாக மோசேயை எதிர்த்து பேசினார்கள், மோசேயை அசட்டை செய்தார்கள், அற்பமாக எண்ணினார்கள் (எண் 12:1,2). இதன் விளைவு மிரியாம் குஷ்டரோகியினார், அதனால் ஏழு நாள் பாளையத்திற்கு வெளியே இருந்தார் (எண் 12:10—15).

## நற்குணங்கள்

மிரியாம் துணிவும் ஆற்றலும் மிக்கவர். தகுந்த சமயத்தில் ஞானத்துடன் செயல்படக் கூடியவர். கர்த்தர் செய்த வல்ல செயல்களை நன்றி அறிதலுடன் துதித்துப் பாடினவர். இஸ்ரவேலில் முதல் பெண் தீர்க்கதரிசி,திருமறையில் முதல் பாடல் பாடியவர்.

தம் சகோதரர்களான மோசே,ஆரோனுடன் இணைந்து பெண் தலைமைத்துவத்தை அளித்து மக்களை வழி நடத்தினவர்.


பிரியமானவர்களே, நம்முடன் வாழும் சகோதர, சகோதரிகளுடன் பொறாமையுடன் அல்ல பொறுமையுடன் வாழ்வோம். மிரியாமின் அர்ப்பணிப்புள்ள நற்குணங்களை பின்பற்றுவோம், மிரியாமின் பாளையத்திற்கு புறம்பான ஏழு நாட்களை சிந்தித்து, நம் வாழ்வை சீர்தூக்கி செயல்படுத்துவோம். ஆண்டவர் இயேசு நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,


ஆயரம்மா



*Mrs . P. Velanganni*




## மன்னா அக்டோபர்-25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை. அக்டோபர் மாத மன்னாவைக் குறித்த ஒரு பார்வை. பக்கம் 2-ல எலிசபெத்து தன்னை தாழ்த்தினார், மரியாளை வாழ்த்தினார். நாமும் நம்மை தாழ்த்துவோம், ஒருவரை ஒருவர் வாழ்த்துவோம் என்றும், பக்கம் 4-ல் அன்பே பெரியது எனவே மெய்யான அன்பில் நிலைத்திருப்போம் என்றும், பக்கம் 5-ல் இனியும் காலம் செல்லாது எனவே காலத்தை பயன்படுத்தி ஆண்டவரின் திருப்பனியை அர்ப்பணிப்புடன் செய்வோம் என்றும், பக்கம் 6-ல் நம் பாவங்களை தன் மீது ஏற்று இரட்சிப்பைத் தந்த ஆண்டவர் இயேசுவின் பாதச்சுவடுகளை பின்பற்றி வாழ்வோம் என்றும், பக்கம் 8-ல் இறைச்சாயலில் படைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் சிறப்பானவர்களே அதனால் ஆண்டவரின் பிள்ளைகளாய் செயல்படுவோம் என்றும், பக்கம் 9-ல என் அடையாளம் இயேசு கிறிஸ்துவே என்பதை வாழ்வில் வெளிப்படுத்துவேன் என்றும், பக்கம் 10-ல் இயேசுவின் சீடர் தோமாவின் வாழ்வு நமக்கு நம்பிக்கைக்கான அறைகூவல் என்றும், பக்கம் 11-ல் நம் திருச்சபை வழியாக நடைபெறுகின்ற ஊழியப் புகைப்படங்கள், பக்கம் 12-ல் தூய திருமறையின் ஆகம அகவரிசை பட்டியலின் விளக்கமும், திருமறை வினா விடை எழுதி இருப்போர்,சிறு பிள்ளைகளின் புதிர்கள்,புதிர்களுக்கு பதில் எழுதி உள்ள சிறு பிள்ளைகள் மற்றும் ARTICLE எழுதியுள்ளோர் அனைவருக்கும் பாராட்டுக்களும்,வாழ்த்துக்களும் தெரிவிக்கிறோம். ஆண்டவர் இயேசு ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

# செயலர் மடல்



திருச்சபை மக்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

கடவுள் தமது பெரிதான கிருபையால் கடந்த பத்து மாதங்களிலும் எங்களைத் தாங்கி, எல்லா பயணங்களிலும் பாதுகாப்பாக காக்கப்பட்டது அவருடைய அற்புதமான கரங்களாலே. அவருடைய தயவும் கருணையும் எப்போதும் நம்மோடு தொடர பிரார்த்தனை செய்கிறோம். அவருக்கே ஸ்தோத்திரமும் மகிமையும்! கிருபையின் அருளால் தோத்திரப் பண்டிகையை அழகாகவும் ஆசீர்வாதமாகவும் நடத்தத் திட்டமிட்டு, வழிகாட்டி, செயல்படுத்த அனுதினமும் உதவிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். திருச்சபையின் அனைத்து மக்களுக்கும் இதயபூர்வ நன்றிகள். ஜெபித்து, உழைத்து, கொடுத்து ஆதரவளித்த அனைவருக்கும் விசேஷ நன்றிகள். அவருடைய கிருபை எப்போதும் நம்மோடு இருப்பதாக! தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக ஸ்தோத்திரம் (2 கொரிந்தியர் 9:15) பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தலர் பவுல் சொல்லும் இந்த வசனம் "அவருடைய சொல்லி முடியாத ஈவுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்" விசுவாசியின் வாழ்வில் ஆழமாக சிந்திக்கத்தக்க உண்மையை வெளிப்படுத்துகிறது. தேவன் நமக்கு கொடுத்திருக்கும் கிருபையும், இரட்சிப்பும், ஆசீர்வாதங்களும் மனித வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு மகத்துவமானவை என்பதைப் பவுல் நினைவூட்டுகிறார்.

### 1. சொல்லி முடியாத ஈவு – இயேசு கிறிஸ்து

தேவன் அருளிய மிகப்பெரிய பரிசு இயேசு கிறிஸ்துவே. நம்முடைய பாவங்களைத் தாங்க, சிலுவையில் தன் உயிரைக் கொடுத்தார். நாம் தகுதியற்றவர்களாக இருந்தபோதும், அவர் நம்மை நேசித்து இரட்சிப்பை அருளினார். இந்த ஈவு சொல்லிக் கொடுக்கக் கூடாத அளவுக்கு உயர்ந்ததும், நித்தியமானதுமாகும்.

### 2. கிருபையின் நிறைவு

தேவன் கொடுப்பது நம் செயல்களின் பலனாக அல்ல, அவர் கிருபையின் வெளிப்பாடாகும். நம்முடைய குறைகளையும் பலவீனங்களையும் அறிந்தும், அவர் நம்மை தழுவி உயர்த்துகிறார். ஒவ்வொரு நாளும் நாம் அனுபவிக்கும் சுவாசம், ஆரோக்கியம், அமைதி, பாதுகாப்பு, ஆனந்தம் இவை அனைத்தும் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளே.

### 3. நன்றி மனப்பான்மை கொண்ட வாழ்வு

பவுல் இந்த வசனத்தை எழுதும்போது, நன்றி உணர்வின் ஆழத்தை விசுவாசிகளுக்கு கற்றுக்கொடுக்கிறார். தேவன் நமக்கு செய்துள்ள நன்மைகளை நினைவில் கொள்ளும் போதும், நமது உள்ளம் ஸ்தோத்திரம் செய்யாமல் இருக்க முடியாது. நன்றி கொண்டவர் ஒருபோதும் குறை கூறுவதில்லை; வாழ்க்கையில் எதை எதிர்கொண்டாலும், "எனக்கிருக்கும் அனைத்தும் தேவன் தந்த ஈவு" என்று உணர்ந்து வாழ்கிறார்.

### 4. நம்மையும் ஈவாக அர்ப்பணிப்போம்

தேவன் நமக்குத் தந்த ஈவை நினைக்கும் போது, நாமும் நமது வாழ்க்கையை அவருக்காக ஈவாக அர்ப்பணிக்க வேண்டும். நம் நேரம், திறமைகள், ஆசிகள் அனைத்தையும் தேவனுடைய ராஜ்யத்திற்காக பயன்படுத்தும்போது, நமது வாழ்வு தேவனுக்கு இனிமையான பலனாக மாறுகிறது.

### 5. நிறைவாக

2கொரிந்தியர் 9:15 நமக்கு ஒரு உண்மையைத் தெளிவுபடுத்துகிறது: தேவனுடைய ஆசீர்வாதங்களை எண்ணிக்கொள்வது நம் வாயால் ஸ்தோத்திரம் சொல்வதிலேயே தொடங்குகிறது. அவர் நமக்குத் தந்த கிறிஸ்து வாழ்க்கையின் சிறந்த பரிசு —நம்மை நித்தியவாழ்விற்கு வழிநடத்துகிறார். ஆகையால், சொல்லி முடியாத தனது ஈவுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! அவருடைய கிருபை நம் வாழ்வில் எப்பொழுதும் பெருகட்டும்.

**இறைப் பணியில்**

Mr. Santhosh Kumar

திருச்சபைச் செயலர்




கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர்களே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் கர்த்தர்தாமே இந்த மாதம் முழுவதும் நம்மோடு கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக இந்த மாதத்தில் வாக்குதத்தம் ஆக கர்த்தர் நம்மோடு பேச விரும்புகிற வசனம் (யோவான் 2:5)

## அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள்


கானா ஊர் கலியாணத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அங்கு திராட்சரசம் இல்லாதபொழுது அவர்களுக்குத் திராட்சரசம் கொடுக்கும்படியாகச் இவ்விதம் மரியாள் அங்கிருந்த வேலைக்காரர் பார்த்து அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் எனக்கு அன்பான சகோதரர்களே இந்த மாதத்தில் கர்த்தர் நமக்கு என்ன சொல்லுகிறாரோ அவைகளையே செய்ய நம்மை நாமே முழுவதுமாய் ஒப்புக் கொடுப்போம் அப்பொழுதுதான் நாம் என்ன சொல்கிறோமோ, நாம் என்ன விரும்புகிறோமோ, நாம் என்ன செய்யச் சொல்லி அவனுடைய சமூகத்தில் ஜெபிக்கிறோமோ, கர்த்தர் அதை நமக்கு நிறைவேற்றுவார் நாம் அவர் சொல்கிறபடி செய்வோமானால் கட்டாயம் நாம் சொல்லுகிறபடி அவர் செய்வார். (இயேசு) ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்று சொன்னார். தண்ணீர் ஒரு அற்பமானது தான். ஆனால் ஆண்டவர் ஜாடிகளை தண்ணீர்களால் நிரப்பச் சொன்னார். ஏனென்றால் அவர் அதைத் திராட்சரசமாக மாற்றப் போகிறார். ஆண்டவருடைய மகிமை எப்பொழுதுமே அற்பமானவைகளை மகிமையானவைகளாய் மாற்றுவதே. மனிதனுடைய வாழ்க்கையிலும் அதையே செய்கிறார். அற்பமான ஒரு மனிதனை மகிமைகரமாக மாற்றுகிறார். வீணாய்ப் போன ஒரு மனிதனை பிரயோஜனமானவனாய் மாற்றுகிறார். எல்லாமே தேவனுடைய உன்னதமான ஒரு செயல். எளியவைகளைக் கொண்டு ஆண்டவர் செய்யக்கூடிய அவருடைய மகத்துவத்தை விளங்கப்பண்ணுகிறார். இதுவே தேவன் செய்யக்கூடிய உன்னதமான காரியம். நம்முடைய வாழ்க்கையில் நாம் அற்பமாக எண்ணப்படலாம். ஆனால் கர்த்தருடைய கரங்களில் நம்மை ஒப்புக்கொடுக்கும்பொழுது ஆண்டவர் அதை மகிமைகரமாக மாற்றுகிறார். மனிதர்களிடத்தில் நாம் புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்போமானால் அது தவறு. ஆனால் தேவனிடத்தில் நாம் புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர் இந்தக் காரியத்தைச் செய்கிறார். அநேகர் இந்த உலக மனிதர்கள் பார்வையில் தாங்கள் உயர்வாய்க் காணப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு ஜெபிக்கின்றார்கள். ஆனால் அந்த ஜெபம் தேவனால் கேட்கப்படுவதில்லை. அவர் நம்முடைய இருதயத்தை அறிந்திருக்கிறார். ஆண்டவருக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

அவரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் கர்த்தர் உங்களை தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக .ஆமென்., ஆமென்.,

Article by

**MR. ASHOK KUMAR**

Men's Fellowship



# என் அழுகையின் சத்தம்

## THE SOUND OF MY CRY

தேவ பிள்ளைகளே, கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். கர்த்தர் என் அழுகையின் சத்தத்தை கேட்டார். ( சங்கீதம் 6-8) இன்றைக்கும் கூட நம்முடைய அழுகையின் சத்தத்தை கரத்தர் கேட்கிறார்.

முதலாவதாக, சங்கீதக்காரன் சொல்கிறான், இரா முழுவதும் என் படுக்கை கண்ணீரால் ஈரமாயிற்று. இது, தாவீது நடந்து வந்த மரணத்தை விட கொடுமையான பாதையானது. தனிமையாக இருப்பது மற்றும் நம்மை யாரும் விசாரிக்கவில்லையே என்று நினைப்பது கொடுமையான பாதை. ஆனாலும் கர்த்தர் தாவீதின் அழுகையின் சத்தத்தை கேட்டார். அருமையான தேவ பிள்ளைகளே, நாமும, தாவீதைப்போல யாருக்கும் தெரியாமல் அழுது கொண்டிருக்கிறோமா? நம் அழுகையின் சத்தத்தையும் கேட்க ஆண்டவர் வல்லவராய் இருக்கிறார்

இரண்டாவதாக வனாந்தரத்திலே, ஆகாரும் இஸ்மவேலும் அலைந்து திரிந்த போது, துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்த பின்பு ஆகார் பிள்ளையை ஒரு செடியின் கீழ் விட்டு விட்டு சற்று தூரப்போய் சத்தமிட்டு அழுதாள். பிள்ளையின் அழுகை சத்தத்தை கேட்ட தேவன் ஆகாருக்கு இரங்கினார். (ஆதியாகமம் 21:14-20) நாமும் குடும்ப சூழ்நிலையை எண்ணி அழுது கொண்டிருக்கிறோமா? நம் அழுகையின் சத்தம் கேட்டு, நம் சந்ததியை பெரிதாக்க ,தேவன் இன்றும் ஜீவன் உள்ளவராய் இருக்கிறார்.

மூன்றாவதாக, பேதுரு ஆண்டவரை எவ்வளவு நேசித்தார் என்பதை வேதத்தில் படித்து அறிந்திருக்கிறோம். அதே பேதுருவை பார்த்து ஆண்டவர், சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை 3 முறை மறுதலிப்பாய் (லூக்கா 22:34) என்று சொன்ன படியே இயேசுவை மறுதலித்ததையும் வேதத்தில் வாசிக்கிறோம். இயேசு தனக்கு சொன்ன வார்த்தையை பேதுரு நினைவு கூர்ந்து மிகவும் அழுதான். இயேசு உயிர்த்தெழுந்த பின், பேதுருவின் அழுகையை கேட்ட ஆண்டவர், அவனை பரிசுத்த ஆவியினால் நிறைத்தார். அதன்பிறகு பேதுரு தேவாலயத்திற்கு போகும் போது பிச்சைக்காரன் ஒருவன் அவனிடத்தில் ஏதாவது கிடைக்குமா என்று கேட்ட போது பேதுரு, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்தில் இருப்பதை உனக்கு தருகிறேன்" என்று சொல்லி இயேசு

கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நடக்கச் சொன்னான் என்பதையும் நாம் வேதத்தில் பார்க்கிறோம். பேதுருவைப் போல நாமும் ஆண்டவரை மறுதலித்து விட்டோமே, தேவனை விட்டு பின் வாங்கி விட்டோமே என்று வேதனையில் அழுது கொண்டிருக்கிறோமா? நம்மையும் மன்னித்து, வல்லமையாக எடுத்து பயன்படுத்த தேவன் போதுமானவராய் இருக்கிறார். அருமையான தேவ பிள்ளைகளே, தாவீது, ஆகாரின் பிள்ளை, பேதுரு என்பவர்களின் அழுகை சத்தத்தை கேட்ட தேவன் இன்றைக்கே நம் அழுகையின் சத்தத்தையும் கேட்பார்.

மரித்தேன், ஆனாலும் சதாகாலமும் உயிரோடிருக்கிறேன். (வெளி 1:18) என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (யோவான் 11:25) என்று சொன்ன தேவன், இந்த நாளிலும் நம் அழுகையின் சத்தத்தையும் கேட்பார் என்று விசுவாசிப்போம், ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்.

தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. ஆமென்.

Article by

**MRS. VIMALA NICSON**

Women's Fellowship

## NEHEMIAH 1-13
## நெகேமியா 1-13

1.சூசான் அரண்மனையில் நெகேமியாவின் வேலை என்ன?

2. நெகேமியா எதை கட்டுவதற்கு அழைப்பு விடுத்தார்?

3. கிழக்கு வாசலை காக்கிறவன் யார்?

4. கையில் ஆயுதம் ஏந்தி,மறு கையில் பணி செய்தவர்கள் யார்?

5. 12 வருஷ காலமாய் நேர்மையாக பணி செய்தது யார்?

6. பெண் தீர்க்கதரிசி யார்?

7. எருசலேமுக்கு திரும்பி வந்தவர்களுடன் இருந்த கழுதைகள் எத்தனை?

8. கூடாரம் போட தேவையானவைகளை எங்கிருந்து கொண்டு வர சொல்லப்பட்டது?

9. இஸ்ரவேலர் செல்வ செழிப்பாய் வாழ்ந்தது எதினால்?

10.சகல வேலைக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்கு எவ்வளவு?

11. ஜெபத்திலே,ஸ்தோத்திரப் பாட்டை தொடங்குபவன் யார்?

12. பாடகர்கள் மேல் விசாரிப்புக்காரன் யார்?

13.மீன் வியாபாரிகள் யார்?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

## அக்டோபர்-2025 மாத வினாவிற்கான விடைகள்

| | |
|---|---|
| 1. எஸ் 1:7,8, | 6. எஸ் 6:15, |
| 2. எஸ் 2:61,62, | 7. எஸ் 7:12, |
| 3. எஸ் 3:10, | 8. எஸ் 8:17, |
| 4. எஸ் 4:13, | 9. எஸ் 9:9, |
| 5. எஸ் 5:11,12 | 10. எஸ் 10:34 |

### அக்டோபர்-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி.ஜெனிபர் பால்,

திருமதி.ஜோனிஸ் ஹெர்சல்,

திருமதி.ஜெயின் ராஜவேல்,

செல்வி.அஜின்ஷா,

திருமதி.பிப்ளின் நெல்சன்,

திருமதி.ராதிகா செல்வக்குமார்,

திருமதி.ரேனா ஜோஸ்,

திருமதி.ரோஸ்மேரி.

# SALVATION

Grace and Peace to you all, church members, from our Lord Jesus Christ.

**Salvation: God's greatest gift to humanity**

**Introduction:** Why do we talk about salvation?

In today's world, people chase after many things such as success, recognition, love, and purpose. Yet deep inside, there is a quiet thought that keeps returning:

***Am I truly at peace with God?***

Salvation is not an old religious word. It is the heartbeat of the Gospel - the very reason Jesus came into the world. It's not about rules, but a relationship. Not about religion, but redemption.

**1) What is Salvation?**

Salvation means to be rescued - rescued from sin, guilt, and eternal separation from God.
We are all born with sin, separated from the Holy God. But the good news is this - God didn't leave us lost. He sent His Son, Jesus Christ, to pay the price we could never pay.
Salvation is not earned by good works, church attendance, or religious habits.
It is a gift given by God's grace through faith in Jesus.

***"For the wages of sin is death, but the gift of God is eternal life in Christ Jesus our Lord."***
***Romans 6:23***

**2) Why do we need Salvation?**

Many people today think, "I am not that bad, why would I need to be saved?"
But sin is not just about bad behaviour — it's about a broken relationship with God.
Even a small lie, a proud thought, or selfishness separates us from His holiness.
When Jesus died on the cross, He took our punishment — our shame, our sin — and gave us His forgiveness, His peace, and His life in return. That's the beauty of salvation.

**3) How can we receive Salvation?**

The Bible gives a clear and simple answer:

***"If you declare with your mouth, 'Jesus is Lord,' and believe in your heart that God raised Him from the dead, you will be saved."*** ***Romans 10:9***

Salvation begins with repentance, faith, and surrender. It's a lifelong relationship.

**Here is a story:**

***The King and the Criminal (Story of Grace and Justice)***

Once there was a righteous king whose law was perfect. One day, his own mother committed a serious crime. The law demanded a heavy fine or severe punishment.
The king was torn — if he forgave her, justice would die; if he punished her, love would die. So, he decided.
He took off his royal crown, came down from the throne, and paid the fine from his own treasure. Justice was satisfied and Love was expressed.
That is exactly what God did for us. He didn't cancel the punishment for sin - He paid it Himself on the cross through Jesus.

***Romans 5:8 says***, God demonstrates His love toward us, in that while we were still sinners Christ died for us. At the cross, Justice and Mercy kissed each other.

Dear friends, no matter who you are or what you have done, Jesus is reaching out to you today.
Salvation is not far away - It's one prayer away.
As believers, let us live as saved people shining the light of Christ in schools, colleges, workplaces and online spaces.
***Let the world see that true freedom is found not in sin, but in the Savior***

Article by,
Mr. Thangaraj Daniel.

# இயேசுவின் சீடன்

# பர்த்தலமேயு



**பெயர் மற்றும் அடையாளம்:**

- பர்த்தலமேயு என்பவர் இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவராகக் குறிப்பிடப்படுகிறார்.
- அவரது பெயர் "பர்—தல்மை" (BAR-TOLMAI) என்று எபிரேயத்தில் எழுதப்படுகிறது, அதாவது "தல்மை என்பவரின் மகன்" என்று பொருள்.
- அவரை சில அறிஞர்கள் நத்தனியேல் (NATHANAEL) என்பவராகவே கருதுகின்றனர் (யோவான் 1:45–51).

**இயேசுவுடன் சம்பந்தம்:**

பர்த்தலமேயுவை பிலிப்பு என்பவர் இயேசுவிடம் அழைத்துச் சென்றார். அவர் முதலில் "நாசரேத்து நல்லது உண்டாகுமா?" என்று சந்தேகம் கொண்டார், ஆனால் இயேசு அவரைப் பார்த்தபோது "இதோ உண்மையான இஸ்ரவேலியன்; அவனில் வஞ்சகம் இல்லை" என்று கூறினார். இதன் மூலம் அவர் இயேசுவை "தேவனுடைய குமாரனாகவும், இஸ்ரவேலின் ராஜாவாகவும்" நம்பினார்.

**பர்த்தலமேயுவின் பிரசங்கப்பணி:**

பைபிளில் அவரின் பின்னர் வாழ்க்கை விரிவாக இல்லை, ஆனால் பழைய திருச்சபை மரபுகள் கூறுகின்றன.

**அவரின் பிரசங்க இடங்கள்:**

- இடீயா (IDUMEA)
- மெசபொத்தாமியா (MESOPOTAMIA)
- பெர்சியா (PERSIA – இன்றைய ஈரான்)
- எத்தியோப்பியா (ETHIOPIA)
- அர்மேனியா (ARMENIA)
- இந்தியா (INDIA)

**இந்தியாவுக்கான பிரசங்கம்:**

சில பழைய கிறிஸ்தவ ஆவணங்கள் (EUSEBIUS, JEROME) பர்த்தலமேயு இந்தியாவில் சுவிசேஷம் அறிவித்தார் என்று கூறுகின்றன. அவர் மத்தேயுவின் சுவிசேஷத்தின் ஒரு பிரதியை இந்திய மக்களுக்குத் தந்ததாகவும் கூறப்படுகிறது.

**நாம் கற்றுகொள்ள வேண்டியது:**

பர்த்தலமேயு அர்மேனியாவுக்குச் சென்று, அங்கு அரசரின் சகோதரரை குணப்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. இதனால் பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். ஆனால் அர்மேனிய அரசன் POLYMIUS கோபம் கொண்டு அவரை தோல் உரித்து உயிருடன் கொன்றார் (FLAYED ALIVE). சில மரபுகள் அவர் பின்னர் தலையறுக்கப்பட்டார் என்றும் கூறுகின்றன.

👉 இதனால் அவர் "தோல் உரிக்கப்பட்ட தூதர்" எனப் பிரபலமானார்.

👉 அவருடைய புனித சின்னம் ஒரு கத்தி அல்லது தோல் ஆகும்.

**பர்த்தலமேயுவின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது:**

- உண்மைமையும் நேர்மையும் – வஞ்சகமில்லாத மனம் கொண்டு வாழ வேண்டும்.
- நம்பிக்கை – சந்தேகத்திலிருந்தும் உண்மையிலே நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- பணிவு – பெருமை இல்லாமல் அமைதியாக சேவை செய்ய வேண்டும்.
- தியாகம் – நம்பிக்கைக்காக உயிரையும் தியாகம் செய்யும் மனம் வேண்டும்.
- அர்ப்பணிப்பு – கடவுளின் பணியில் முழு மனதுடன் ஈடுபட வேண்டும்.
- பொறுமை – சோதனைகளிலும் நம்பிக்கையில் நிலைத்திருக்க வேண்டும்.

Article by

**MISS. AJINSHA**









# OCTOBER Winners

## Cross Word

- Sherinsha
- Iniyan Immanuel
- Iniyal Evangeline

## Find the Way

- Hazel Hartlyn
- Jesil Bernice
- Sherinsha
- Joshua

## Kids Colouring

- Hazel Hartlyn
- Jesil Bernice
- Johanna
- Shaana Liliya

## Word Search

- Hazel Hartlyn
- Jesil Bernice
- Sherinsha
- Joshua

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

Email Subject: Your name / Quiz, type / Month - Year

to Church Email: csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Name:

Date:

Kids Coloring



# THE FRUIT OF THE SPIRIT

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | G | W | T | K | G | Q | T | C | A | D | P | F |
| I | M | F | F | W | K | Y | O | L | X | D | A | I |
| K | C | F | F | Q | L | F | I | Y | O | I | T | V |
| I | I | K | A | O | S | G | L | O | T | V | I | W |
| X | M | Q | I | O | R | Y | E | H | V | S | E | D |
| L | O | R | T | N | O | C | F | L | E | S | N | A |
| W | B | R | S | J | D | U | R | A | I | E | C | H |
| U | J | I | O | B | L | N | T | Z | C | N | E | G |
| J | Y | Z | L | N | J | Q | E | A | R | D | L | L |
| X | B | F | E | M | U | U | E | S | D | O | Y | B |
| Q | Q | S | D | X | U | P | O | Q | S | O | B | T |
| A | S | S | E | N | E | L | T | N | E | G | M | O |
| X | L | G | J | O | M | L | Q | U | P | U | L | N |

*Galatians 5:22-23*



FAITHFULNESS
GENTLENESS
GOODNESS
JOY
KINDNESS
LOVE

PATIENCE
PEACE
SELF-CONTROL


Name : ..........................................................................

WORD SEARCH

FIND THE WAY

Name : ........................................

# Noah's Ark



CROSS WORD

Name : ............................................................

## Books of the Bible Puzzle



Unscramble the name of each book of the Bible and write it correctly in the blank.

1. U T R H ____________ (3)
2. T W A M H E T ____________ (5)
3. B O P E R R S V ____________ (5)
4. S U B N E M R ____________ (7)
5. W R E S H B E ____________ (6)
6. U S A J H O ____________ (2)
7. M O R A S N ____________ (1)
8. G E J D S U ____________ (3)
9. S T R E E H ____________ (3)
10. H M O L I P E N ____________ (2)
11. L I N E D A ____________ (5)
12. S E E S I N G ____________ (5)
13. S H E E P I S A N ____________ (2)
14. C L A I M H A ____________ (7)
15. H A R M E E J I ____________ (3)
16. A G H A I G ____________ (6)
17. S N A G I L A T A ____________ (5)

# NOVEMBER - 2025

| | |
|---|---|
| 01-NOVEMBER | Mr. M.C. Christopher |
| 01-NOVEMBER | Ms. Jeremy Evans Prince |
| 02-NOVEMBER | Mr. S. Bervin Meshak |
| 03-NOVEMBER | Master. Aiden Mathew |
| 06-NOVEMBER | Mr. R. Paul Gnana Prabu |
| 06-NOVEMBER | Ms. A. Jenifer |
| 06-NOVEMBER | Mr. Glymond Fenzer |
| 07-NOVEMBER | Master. Meraj Daniel |
| 09-NOVEMBER | Mrs. Sunitha Ravindra |
| 12-NOVEMBER | Ms. Jenisha Christina |
| 12-NOVEMBER | Ms. Ida Priskilla |
| 14-NOVEMBER | Mrs. Jein Arputhakani Rajavel |
| 14-NOVEMBER | Ms. Bessy Rose |
| 14-NOVEMBER | Master. Senen Liam Raj |
| 15-NOVEMBER | Master. Jahosh John Joseph |
| 17-NOVEMBER | Mrs. Harika Chandrasekar |
| 17-NOVEMBER | Master. Raja Sekar |
| 18-NOVEMBER | Master. Prince Abraham Daniel |
| 19-NOVEMBER | Mr. Prince Emmanuvel |
| 19-NOVEMBER | Mr. G. Stanly |

*"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."*

| | |
|---|---|
| 19-NOVEMBER | Ms. Jaya Prithi |
| 20-NOVEMBER | Mrs. J. Ajeetha |
| 21-NOVEMBER | Mr. Lawrence Gambeeram |
| 22-NOVEMBER | Mrs. Ann Rubalin |
| 23-NOVEMBER | Mrs. J. Vivilin Juni |
| 23-NOVEMBER | Mrs. Hephzibah |
| 25-NOVEMBER | Ms. Abiya |
| 25-NOVEMBER | Mrs. Grace Packia Sugirtha |
| 26-NOVEMBER | Ms. Evalina |
| 27-NOVEMBER | Mrs. Suja Jasmine Mesiah Das |
| 27-NOVEMBER | Mrs. M. Aishwariya |
| 27-NOVEMBER | Mrs. Annie Selvi Danesh |
| 28-NOVEMBER | Mrs. Josephine Nimshi |
| 28-NOVEMBER | Master. Cairo Maverick |
| 29-NOVEMBER | Mr. S. Deva Prakash |
| 30-NOVEMBER | Ms. J.S. INIYAL EVANGELIN |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

"The Lord bless you and keep you; the Lord make his face shine on you and be gracious to you; the Lord turn his face toward you and give you peace."

# OCTOBER *Wedding* ANNIVERSARY

**08-OCT** Mr. A. Prem Jenifer
&
Mrs. Baby Christy Monalizha

**23-OCT** Mr. G. Stanly
&
Mrs. R. Gold Jency

**30-OCT** Mr. Babu Abraham
&
Mrs. Babitha Babu

**30-OCT** Mr. J. Stephen Chellaraj
&
Mrs. P. Hemalatha

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14



















**HARVEST FESTIVAL '25**

# 08.11.25
# SATURDAY

**CSI TAMIL PARISH
ALAIN**


























## SENIOR

### TEACHER

## MRS. AUGUSTA LAWRENCE



EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

